2020 செப்டம்பர் 16] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

தமிழ்நாட்டின் கிராமப்புறங்கள் மற்றும் மூலைமுடுக்கில் உள்ள ஏழை, எளிய மாணாக்கர்களின் உயர் கல்வி கனவு நனவானது. இதன் காரணமாகத்தான் அகில இந்திய அளவில் 26.3 விழுக்காடு என இருக்கும் மாணவர் சேர்க்கை விகிதம் தமிழ்நாட்டில் மிக அதிகமாக, அதாவது 49 விழுக்காடு என்ற அளவில் உள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கோரிக்கை மற்றும் விழுப்புரம் மாவட்ட பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தை இரண்டாகப் பிரித்து, விழுப்புரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு புதிய பல்கலைக்கழகம் உருவாக்கப்படும். இப்பல்கலைக்கழகம் நடப்பாண்டிலேயே செயல்படத் துவங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. சமூக நலம் மற்றும் உயர் கல்வி ஆகிய துறைகள் தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் சொல்லுங்கள்.

***மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டம் தந்த சரித்திர நாயகன், பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். பெண் இனத்தைக் கண்ணியமாய் காத்திட்ட, மண்ணினத்துப் பெண்ணரசி, விண்ணுலகின் மாதரசி, நான் நித்தம் வணங்குகின்ற தெய்வம், என் வழித்துணை தெய்வம், என்னை வாழவைத்த தெய்வம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மா வழியில் ஆட்சி; அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி எனும் இலக்கினை எட்டி, இந்தியாவிலேயே Number 1 முதலமைச்சர் என்ற பெருமையை தமிழகத்திற்குப் பெற்றுத் தந்த (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தென்பாண்டிச் சிங்கம், பண்பின் சிகரம், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், சீர்மிகு இச்சபையினைச் சிறப்பாக

நடத்திவரும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எனது பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களைப் பாதுகாத்து, அவர்களைக் கண்ணியத்துடன் நடத்துவதில் சமுதாயத்தில் அனைத்துப் பிரிவினருக்கும் கடமை உள்ளது என்றும், அப்போதுதான் அனைத்துவிதமான குற்றங்களும் குறைக்கப்படும் என்றும், 1–1–2013 அன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த தாரக மந்திரத்தை மனதில் நிறுத்தி, இந்தியாவிலேயே முதன்முறையாகப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்புப் பிரிவை 6–3–2019 அன்று உருவாக்கினார்கள். பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் நடக்காமல் தடுக்கவும், சமுதாயத்தில் துன்பப்படும் பெண்கள் மற்றும் குழந்தைகளை பாதுகாக்கவும் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில், மகளிர் நலன் மற்றும் பாதுகாப்பு கருதி, விதி 110–ன்கீழ் இந்திய தண்டனைச் சட்டம், 1860–ல் பெண்களுக்கு எதிரான குற்றங்களில் 4 சட்டப் பிரிவுகளில் தண்டனைகளைக் கடுமையாக்கி, திருத்தங்களை மேற்கொள்ள மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்வதாக அறிவித்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் சார்பாக மனமார்ந்த, நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்து விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். இன்றைக்கு அம்மா அவர்களின் வழியில் தமிழகத்திலே நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களுக்கும் வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆகிய தங்களுக்கும் எனது வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு அறிவித்த புதிய பல்கலைக்கழகமான திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தை விழுப்புரத்தினை தலைமையிடமாகக் கொண்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் ஆகிய மாவட்டங்களில் அமைத்து, அதனை அங்கே வழங்கியமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2011 ஆம் ஆண்டு அன்று ஆட்சிப்பொறுப்பேற்ற நாள் முதற்கொண்டு புதியதாக பொறியியல் கல்லூரிகள் 4, பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் 21, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் 67 என 92 புதிய கல்லூரிகளை உயர் கல்வித் துறையிலே வழங்கிய பெருமை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசைச் சாரும் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், புதிய பாடப் பிரிவுகள் வேண்டுமென்ற மாணாக்கர்களின் கோரிக்கையை ஏற்று, ஒட்டுமொத்தமாக 2011 முதல் இன்றுவரை, 1,666 புதிய பாடப் பிரிவுகளை வழங்கிய பெருமையும் அம்மாவுடைய அரசைச் சாரும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–40

உயர் கல்வித் துறையின்கீழ் 13 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. அந்தப் பல்கலைக்கழகங்களில் இரண்டு, சுதந்திரம் வாங்குவதற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள். அதில் ஒன்று, அம்மா அவர்களால் 2013–ல் அரசுடைமையாக்கப்பட்டு, இன்றைக்கு அதுவும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. மீதமிருக்கக்கூடிய 11 பல்கலைக்கழகங்களில் ஒன்று காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் வரப்பெற்றது; 3 திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வரப்பெற்றன. 7 புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் புரட்சித் தலைவி அம்மா ஆகியோருடைய ஆட்சிக் காலத்தில் வரப்பெற்றன என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதனுடைய தொடர்ச்சியாகப் புதியதாக ஒரு பல்கலைக்கழகத்தை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு உயர் கல்வித் துறையின் சார்பாக மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழக மாணாக்கர்களின் கோரிக்கையை ஏற்று, 6 சட்டக் கல்லூரிகளும், 4 வேளாண்மை மற்றும் தோட்டக்கலைக்

கல்லூரிகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. ஒட்டுமொத்தமாக 2011–ல் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற நாள் முதல் இன்றுவரை 17 மருத்துவக் கல்லூரிகளும், 5 கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அம்மாவுடைய ஆட்சி மாணாக்கர்கள் உயர் கல்வி பெறுவதற்கான ஒரு பொற்கால ஆட்சியாக இன்றைக்குத் திகழ்ந்துகொண்டிருக்கிறது என்பதற்கு இதைத் தவிர வேறெந்த சான்றும் தேவையில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, மீண்டும் ஒரு முறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள் கல்வியில் மிகவும் பின்தங்கியவை; விவசாயிகள் நிறைந்த மாவட்டங்கள். மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, வட மாவட்டங்களில் இருக்கின்ற மக்கள் சட்டக் கல்வி பயிலுவதற்காக ஒரு சட்டக் கல்லூரியும், ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்டம், ரிஷிவந்தியத்தில் ஒரு கலைக் கல்லூரியும், விழுப்புரம் நகரத்தில் பெண்களுக்கான ஒரு கலைக் கல்லூரியும், தற்போது வானூரில் ஒரு கலைக் கல்லூரியும், ஆக 3 கலைக் கல்லூரிகள் ஆரம்பிப்பதற்கு அனுமதி அளித்துள்ளார்கள். சென்னையை தவிர்த்து, வெளியூர் வந்தால் திருச்சி வரை வேறெந்த பல்கலைக்கழகமும் இல்லாத நிலையில், விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்ட மக்களுடைய நீண்டகால கோரிக்கையை ஏற்று, திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தை இரண்டாகப் பிரித்து, விழுப்புரத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய பல்கலைக்கழகத்தைத் தொடங்குவதற்கு உதவி செய்து, அதைத் தொடங்குவதற்கு அனுமதி அளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு என் சார்பாகவும், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் மாவட்டங்களுடைய மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)